தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 177 | 4 Pages | 24.1.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 177 | 4 பக்கங்கள் | 24.1.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்**

**விளக்கம்:** இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்து விடுதலாகும்.

## பெண்களுக்கு ஆம் ஆத்மி, காங்கிரஸ் மீது நம்பிக்கை இல்லை பிரதமர் மோடி



புதுடெல்லி, ஜன.24

டெல்லியில் 70 சட்டசபை தொகுதிகள் உள்ளன. இந்த தொகுதிகளுக்கு ஒரேகட்டமாக பிப்ரவரி 5ம் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. ஓட்டு எண்ணிக்கை பிப்ரவரி 8 ம் தேதி நடக்கிறது. இந்த தேர்தலில் ஆளும் ஆம்ஆத்மி, எதிர்க்கட்சியான பாஜக மற்றும் காங்கிரஸ் கட்சி இடையே மும்முனை போட்டி நிலவி வருகிறது.

இந்நிலையில், இந்த தேர்தலில் 699 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிட உள்ளதாக டெல்லி தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார். கடந்த 2020ம் ஆண்டு நடைபெற்ற டெல்லி சட்டசபை தேர்தலில் 672 வேட்பாளர்கள் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி அரசு குறித்து பிரதமர் மோடி ஆடியோ வெளியிட்டுள்ளார். அந்த ஆடியோவில், அவர் கூறியதாவது:

டெல்லியில் இலவச சுகாதார சேவைக்கான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை செயல்படுத்த நாங்கள் கோரிக்கை விடுத்தோம். ஆனால் அவர்கள் அதை செயல்படுத்த விரும்பவில்லை. இந்தத் திட்டத்தை செயல்படுத்தினால் பல நன்மைகள் உள்ளன என்று டெல்லி மக்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். ஆனால் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் ஆம் ஆத்மி அரசு தடைகளை உருவாக்கினர்.

டெல்லியில் குடிநீர் இல்லை. ஆனால் டாஸ்மாக் கிடைக்கிறது. ஆம் ஆத்மி அரசு மீது, மக்கள் வெளிப்படையாக கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள், அவர்கள் கேள்வி கேட்கிறார்கள். வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை என மக்கள் கேட்கிறார்கள். ஆம் ஆத்மி கட்சி தினமும் புதிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. ஆனால் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை.

டெல்லியில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 50 சதவீதத்திற்கும் அதிகமான ஓட்டுக்களை பெறுவதை, பாஜக நிர்வாகிகள் இலக்காகக் கொள்ள வேண்டும். டெல்லி சட்டசபை தேர்தலில் பாஜகவுக்கு மகத்தான வெற்றியை தொண்டர்கள் உறுதி செய்வார்கள். பெண்களுக்கு ஆம்ஆத்மி மற்றும் காங்கிரஸ் மீது நம்பிக்கை இல்லை. பஞ்சாபில் பெண்களுக்கு மாதம் தோறும் பணம் தருவோம் என ஆம் ஆத்மி அரசு வாக்குறுதி அளித்தது. ஆனால் எதுவும் நடக்கவில்லை. ஆனால் பாஜக அரசு மத்திய பிரதேசம், மராட்டியம், ஒடிசா ஆகிய மாநிலங்களில் பெண்களுக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி உள்ளோம்.

இவ்வாறு அதில் பேசி உள்ளார்.

## மகா கும்பமேளா: திரிவேணி சங்கமத்தில் புனித நீராடிய உ.பி. முதல்மந்திரி



லக்னோ, ஜன.24

உத்தர பிரதேசத்தில் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்ச்சி கடந்த 13ந்தேதி தொடங்கியது. பிப்ரவரி 26ந்தேதி வரை 45 நாட்கள் மகா கும்பமேளா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உள்ளது. இதற்காக 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. 1,800 ஹெக்டேர் பரப்பளவில் வாகன நிறுத்த வசதிகள், 2,750 கண்காணிப்பு கேமராக்கள், 15 ஆயிரம் துப்புரவு பணியாளர்கள், 25 ஆயிரம் தொழிலாளர்கள், 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு மையம் உள்ளிட்டவற்றை அரசு அமைத்துள்ளது.

இதுவரை சுமார் 9.24 கோடி பேர் கும்பமேளாவிற்கு வருகை தந்து, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர். நேற்று ஒரே நாளில் அதிகபட்சமாக43.18லட்சம்பக்தர்கள்புனிதநீராடியுள்ளனர்.மகாகும்பமேளாவுக்கு இந்த வருடம் சுமார் 40 கோடி பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் மகா கும்பமேளா நடைபெறும் பிரயாக்ராஜில் உத்தர பிரதேச மாநில முதல்மந்திரி யோகி ஆதித்யநாத் தலைமையில் சிறப்பு மந்திரிசபைகூட்டம்நடைபெற்றது.இந்தசிறப்புமந்திரிசபைகூட்டத்திற்கு பிறகு மதியம் 2.15 மணியளவில் முதல்மந்திரி யோகி ஆதித்யநாத், மாநில மந்திரிகளுடன் திரிவேணி சங்கமத்தில் உயர் பாதுகாப்புக்கு மத்தியில் புனித நீராடினார். அப்போது முதல்மந்திரி மற்றும் மந்திரிகள் ஒருவர் மீது ஒருவர் தண்ணீரை தெளித்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மராட்டியத்தில் ரெயில் விபத்து: 10 பயணிகள் பலி



மும்பை ஜன.24

மராட்டிய மாநிலம் ஜல்கான் மாவட்டத்தில் புஷ்பக் எக்ஸ்பிரஸ் ரெயிலில் தீ விபத்து ஏற்பட்டதாக அஞ்சி பயணிகள் சிலர் அபாய சங்கிலியை பிடித்து இழுத்ததாககூறப்படுகிறது. இதனால் ரெயில் நின்றது. தொடர்ந்து புஷ்பக் ரெயிலில் தீவிபத்து ஏற்பட்டதாகஅஞ்சி சிலபயணிகள் தண்டவாளத்தில் இறங்கி ஓடியுள்ளனர்.

அவர்கள் தண்டவாளத்தை கடந்தபோது மறுபுறம் வந்த கர்நாடக எக்ஸ்பிரஸ் ரெயில் பயணிகள் மீது மோதியதில் 10 பேர் உயிரிழந்ததாகவும், 40 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்த சம்பவத்தில் பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அச்சம் ஏற்பட்டுள்ளது. விபத்தைஅடுத்துமீட்புபணிகளைரெயில்வேஅதிகாரிகள் தீவிரப்படுத்தி உள்ளனர்.

# "அண்ணனாக, தம்பியாக, அப்பாவாக, மகனாக, உறவாக, உடன்பிறப்பாக"

## சிவகங்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சிவகங்கை, ஜன.24

சிவகங்கையில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

★ வீரமும், விவேகமும் விளைந்த மண் சிவகங்கை. திமுக ஆட்சி அமைந்தாலே நலத்திட்ட உதவிகள் சிவகங்கையை தேடி வரும். உங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் உறவாக நான் இருக்கிறேன்.

★ பள்ளி கட்டடம், ஆரம்ப சுகாதார நிலையம், மதுரை தொண்டி தேசிய நெடுஞ்சாலை, சிவகங்கை புதிய நகராட்சி கட்டிடம், 59 திருக்கோவிலில் ரூ.14 கோடி செலவில் கோவில் திருப்பணி, மாணவர்களுக்கு தங்கும் விடுதி, மருத்துவமனை விரிவாக்கம், நியோ ஐ.டி.பார்க், தியாகி ஜீவானந்தம் மணி மண்டபம், செட்டிநாடு வேளாண் கல்லூரி, சிவகங்கை மாவட்டத்தில் பல ஊர்களில் ரூ.616 கோடி செலவில் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

★ எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

★ சிங்கம்புணரி, திண்டுக்கல், காரைக்குடி செல்லும் வாகனங்கள் திருப்பத்தூருக்குள் வராமல் செல்ல ரூ.50 கோடியில் புதிய புறவழிச்சாலை அமைக்கப்படும்.

★ சிவகங்கை ஆட்சியர் அலுவலகத்திற்கு புதியதாக ரூ.89 கோடியில் கட்டடம் கட்டப்படும்.

★ காரைக்குடி மாநகராட்சிக்கு ரூ.30 கோடியில் புதிய அலுவலகம் கட்டித்தரப்படும்.

★ இன்னொருவரின்அறிக்கையை காப்பியடித்து அறிக்கை கொடுக்கிறார். திண்ணையில் அமர்ந்து பேசுவது போல் வெட்டிக்கதை பேசுகிறார் எடப்பாடி பழனிசாமி. எதிர்க்கட்சிதலைவர்போடும்கணக்குகள் அனைத்தும் தப்பு கணக்குகள் தான்.



★ மகளிருக்கு ஸ்கூட்டர் வழங்கப்படும் என கூறிய அதிமுக அதனை நிறைவேற்றியதா? 58 வயதுக்கு மேல் உள்ளோருக்கு இலவச பஸ் பாஸ், பொது இடத்தில் Wifi வசதி என வெற்று வாக்குறுதி அளித்தது அதிமுக தான். பதவிக்காக மட்டும் டெல்லிக்கு சென்றனர் அதிமுகவினர்.

★ 2013ம் ஆண்டு முதல் தமிழகத்தை பற்றாக்குறை மாநிலமாக மாற்றியது எடப்பாடி பழனிசாமி தான். தவழ்ந்து தவழ்ந்து தமிழ்நாட்டை தரைமட்டத்திற்கு கொண்டு வந்த எடப்பாடி திமுக அரசை வீழ்த்த நினைக்கிறார்.

★ 2021 தேர்தலுக்கு திமுக சார்பில் கொடுத்த 505 வாக்குகுறதிகளில் 389 வாக்குறுதிகள் நிறைவேற்றம். 116 வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

★ மத்தியஅரசின்திட்டங்களுக்கும் மாநில அரசின் நிதியை செலவு செய்கிறோம்.

★ தமிழ்நாட்டை திவாலாக்க வேண்டும் என்பது தான் எடப்பாடியின் நோக்கமா? அரசின் எந்த திட்டத்தை வீண்செலவு எனகூறுகிறார்?

★ எங்களில் செயல்பாடுகளை நினைவில் கொண்டு திமுக ஆட்சி திட்டங்களுக்கு மக்கள் அளிக்கும் முதல் மதிப்பெண் போதும் என்றார்.

## தாராபுரத்தில் சிஎஸ்ஐ பெண்கள் மேல்நிலை பள்ளியில் பெண்களுக்கு பாதுகாப்பு, போச்சோ சட்டம், போக்குவரத்து விதிகள் குறித்து விழிப்புணர்வு முகாம்

தாராபுரம், ஜன 24

மாண்மை தேசிய சட்டப் பணிகள் ஆணையக்குழு அவர்களின் ஆணைப்படி தாராபுரம் வட்ட சட்டப்பணிகள் குழு சார்பாக தாராபுரம் சி.எஸ்.ஐ பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் "பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பு பற்றியும் போக்குவரத்து விதிகள் பற்றியும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.பள்ளியின் ஆசிரியர் முனைவர்.பொன்னம்மாள் வரவேற்றார், தாராபுரம் போக்குவரத்து காவல்துறை சார்பாக காவலர்கள் பொன்னுசாமி, ஆசைத்தம்பி ஆகியோர்கள் கலந்து கொண்டு போக்குவரத்து விதிகள் பற்றியும் தலைக்கவசம் அணியும் மாறு தங்களது பெற்றோர்கள் உறவினர்களிடம் தெரிவிங்கள் சாலை பாதுகாப்பு பற்றி கூறினார். தாராபுரம் வழக்கறிஞர் திருமதி.சகுந்தலா பேசுகையில்




பெண் குழந்தைகள் தற்போது செல்போன் பயன்படுத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர், பெற்றோர்களிடம் ஆசிரியர்களிடமும் நிறை,குறைகளை கூறுங்கள், என்றார். தாராபுரம் வழக்கறிஞர்கள் சங்கத் செயலாளர் எம்.ஆர்.ராஜேந்திரன் பேசுகையில், மாணவிகள் உங்களுக்கு ஏதேனும் பிரச்சனை என்றால் "உதவி எண் 1098" அழையுங்கள், சமுதாயத்தில் நல்ல பெயர் எடுக்க மாணவ, சமுதாயம் போதை இல்லா சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றார், தாராபுரம் வழக்கறிஞர்கள் சங்க தலைவர் கலைச்செழியன் பேசுகையில், கரு உருவானதிலிருந்தே பெண் குழந்தைகளுக்கான சட்டம் தொடங்கி தொட்டில் குழந்தை, போக்சோ சட்டம், புதுமைப்பெண் போன்ற பல திட்டங்கள் பெண் குழந்தைகளுக்கு உதவியாக உள்ளது. ஆகவே பெண் குழந்தைகள் இதை பயன்படுத்தி நன்கு படித்து வாழ்வில் முன்னேற வேண்டும் எனக் கூறினார்., தாராபுரம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் திருமதி.சஜினி பேசுகையில், மாணவ சமுதாயம் தெரியாமல் செய்யும் தவறு வாழ்க்கையை சீரழித்து விடும் "NO KEY" "NO HELMET" என்ற சொல்லை தினமும் குடும்பத்தினரிடம் கூறுங்கள், 18 வயதிற்கு முன்பு வாகனம் ஓட்டாதீர்கள் என்று கூறினார் போதை பொருட்கள் விற்பது பற்றி ஏதேனும் தகவல் தெரிவித்தால் அருகில் உள்ள காவல் நிலையத்திலும் அல்லது அரசு உதவி எண்ணிலும் தெரிவியுங்கள் உங்களது பெயர் முகவரி வெளிவராது என்றும் எடுத்துரைத்தார் இறுதியாக பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் திருமதி ஜீவா நன்றியுரை கூறினார். சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

## தமிழகத்தில் புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சி உதயம்

சென்னை, ஜன.24

சென்னையை தலைமை இடமாக கொண்டு புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டுள்ளது இந்த கட்சியின் பொதுச்செயலாளராக மு.ராஜா என்ற ஆசீர்வாதம் பொறுப்பேற்றுள்ளார் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தங்களது கட்சி அகில இந்திய தலைமையிலும் மாநிலத்திலும் முறையான செயல்பாட்டில் இல்லை என்பதால் கட்சியின் நலன் கருதி தாம் தனியாக புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சி தமிழ்நாடு பிரிவை தொடங்கி இருப்பதாகவும் தெரிவித்தார் தமிழகத்தில் அடித்தட்டு மக்களுக்காகவும் விவசாய தொழிலாளர்களுக்காகவும் ஜாதி மத வேறுபாடுகளை கடந்து அனைத்து கட்சிகளுடனும் ஒருமித்த கருத்தை கொண்டுவந்து தமிழகம் முழுவதும் கட்சியை வளர்த்தெடுக்க திட்டமிட்டு இருப்பதாகவும் தெரிவித்தார் முதல் முறையாக புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சி விழுப்புரம் கள்ளக்குறிச்சி மயிலாடுதுறை மதுரை ராமநாதபுரம் திண்டுக்கல் கன்னியாகுமரி சேலம் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் புதிய மாவட்ட செயலாளர்களை நியமித்து கட்சிப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார் தமிழகத்தில் புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சி பலம் பெற வேண்டும் என்பதற்காகவே தாம் தனியாக பிரிந்து ஆதரவாளர்களுடன் இணைந்து புதிய கட்சியாக சோஷலிஸ்ட் கட்சி தமிழ்நாடு என்று தொடங்கி இருப்பதாக தெரிவித்தார் தமக்கு தமிழக மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் வரும் பொது தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தலிலும் தமது கட்சி களம் காணும் என்றார் இந்த செய்தியாளர் சந்திப்பின்போது அவருடன் கட்சியின் மூத்த நிர்வாகிகள் உடன் இருந்தனர்




## ராஜபாளையம்: பொதுமக்களை விரட்டி விரட்டிக் கடித்த தெருநாய்கள்; ஒரே நாளில் 39 பேர் காயம்

ராஜபாளையம், ஜன.24

ராஜபாளையத்தில் இரு வேறு பேருந்து நிறுத்தங்களில் பேருந்துக்காக காத்திருந்த பயணிகள் உட்பட 39 பேரை தெரு நாய்கள் விரட்டி, விரட்டி கடித்த சம்பவம், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

ராஜபாளையம் நகராட்சியில் தெரு நாய்கள் தொல்லையால் குழந்தைகள் மற்றும் பெண்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, தெரு நாய்களை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என நகராட்சி கூட்டத்தில் கவுன்சிலர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் ராஜபாளையம் புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலையில் உள்ள ஜவகர் மைதானம் பேருந்து நிறுத்தம் மற்றும் தென்காசி சாலையில் உள்ள சொக்கர் கோயில் பேருந்து நிறுத்தம் ஆகியவற்றில் பேருந்துக்காக காத்திருந்த பயணிகளை தெரு நாய்கள் திடீரென விரட்டி, விரட்டி கடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து அப்பகுதியில் தெருக்களில் நடந்து சென்றவர்களையும் தெரு நாய்கள் துரத்திச் சென்று கடித்துள்ளது. இப்படி ஒரே நாளில் 39 பேர் நாய் கடியால் காயமடைந்தது ராஜபாளையத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்களில் 7 பேர் தீவிர காயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையடுத்து நேற்று காலை முதல்



கால்நடைத்துறை உதவி இயக்குநர் ராஜராஜேஸ்வரி, நகர் நல அலுவலர் டாக்டர் பரிதா வாணி தலைமையில் ராஜபாளையம் பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து வெறிநாய்கடி தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கப்பட்டது.

# தன்னை காதலித்துவிட்டு வேறு ஒருவருடன் திருமணம் காதலியை கொல்ல திட்டமிட்ட வாலிபர் கைது

கரூர், ஜன.23

கரூர் மாவட்டம் தாந்தோணிமலை அருகே உள்ள சுங்ககேட் பகுதியில் தனியாருக்கு சொந்தமான தங்கும் விடுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் ஆயுதங்களுடன்சில வாலிபர்கள்தங்கி இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் அங்கு போலீசார் அதிரடியாக சோதனை நடத்தி, 3 வாலிபர்களை மடக்கி பிடித்து தீவிர விசாரணை நடத்தினர். இதில் அவர்கள் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில், சூசையப்பர்பட்டினம் பகுதியை சேர்ந்த சிவசங்கரன், மதுரை மாவட்டம், செல்லூர், கல்பானம் ரோடு பகுதியை சேர்ந்த ஆனந்த், திண்டுக்கல் மாவட்டம், நாராயணபிள்ளை தோட்டம் பகுதியை சேர்ந்த ஹரிஹரன் என்பது தெரியவந்தது. மேலும் இவர்கள் தங்கியிருந்த அறையில் பட்டாக்கத்தி, சூரி கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் இருந்ததும் தெரியவந்தது.

தொடர்ந்து அவர்களிடம் நடத்திய விசாரணையில், சிவசங்கரன் தான் காதலித்த பெண், தன்னை திருமணம் செய்து கொள்ளாமல், வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டதாகவும், இதனால் தனது நண்பர்களான ஆனந்த், ஹரிஹரன் ஆகியோருடன் சேர்ந்து அந்த பெண்ணையும், அவரது கணவரையும் கொலை செய்ய திட்டமிட்டு கரூருக்கு வந்ததாகவும் தெரிவித்தனர். இதையடுத்து, தாந்தோணிமலை போலீசார் வழக்குப்பதிவு செய்து 3 வாலிபர்களையும் கைது செய்தனர்.

மேலும், அவர்களிடம் இருந்த ஆயுதங்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திய காரையும் பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# வலிப்பு ஏற்பட்ட வாலிபரை மீட்டு தாசில்தார் வாகனத்தில் அனுப்பிய கலெக்டர் பொதுமக்கள் பாராட்டு

கடலூர், ஜன.24

கடலூர் திருப்பாதிரிப்புலியூர் பஸ் நிலையத்தில் அடிப்படை வசதிகள் இல்லை என நேற்று மாலை மலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் கடலூர் பஸ்நிலையத்திற்கு இன்று காலை மாவட்ட கண்காணிப்பாளர் மோகன், கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா, ஆணையாளர் அனு மற்றும் அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

அங்கு பொது கழிப்பறை கட்டிடம் ரூ.15 லட்சம் மதிப்பில் நவீன வசதிகளுடன் சீரமைப்பு




பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மோகன், மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், மேயர் சுந்தரி ராஜா, ஆணையாளர் அனு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பொது கழிப்பறையை ஆய்வு செய்துவிட்டு வெளியே வந்தபோது, அங்கு 35 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் வலிப்பு நோயால் விழுந்து கிடந்தார். இதை பார்த்த மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மோகன், கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் அந்த வாலிபரை உடனே மீட்டு தாசில்தார் பலராமன் வாகனத்தில் ஏற்றி, கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அந்த வாலிபருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வலிப்பு ஏற்பட்ட வாலிபரை ஆம்புலன்ஸ் வாகனத்திற்காக காத்திருக்காமல் அதிகாரிகள் உடனடியாக தாசில்தார் வாகனத்தில் ஏற்றி சிகிச்சைக்காக அனுப்பி வைத்த சம்பவத்தை பார்த்த பொதுமக்கள் அதிகாரிகளை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ராஜீவ் காந்தி பற்றி அவதூறாக பேசியதாக வழக்கு: சீமான் கோர்ட்டில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க முடியாது ஐகோர்ட்

சென்னை, ஜன.24

கடந்த 2019ம் ஆண்டு விக்கிரவாண்டி இடைத்தேர்தலின் போது, நாம் தமிழர் கட்சி வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்த அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை இன துரோகி தேச துரோகி என பேசி, வன்முறையை தூண்டியதாக கஞ்சனூர் காவல் நிலையத்தில் காங்கிரஸ் மாவட்ட தலைவர் புகார் அளித்தார்.

இந்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கு விக்கிரவாண்டி கோர்ட்



டில் விசாரணையில் உள்ளது. இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க கோரி சீமான் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு விசாரணைக்கு வந்த போது, சீமானின்பேச்சுவன்முறையை தூண்டியது என்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என சீமான் தரப்பில் வாதிடப்பட்டது.

மேலும் இந்த வழக்கின் விசாரணைக்கு ஆஜராகாததால் சீமானுக்கு எதிராக பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இந்த கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதி, பிடிவாரண்டை திரும்பப் பெறக் கோரி விக்கிரவாண்டி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம். நேரில் ஆஜராவதில் இருந்து சீமானுக்கு விலக்கு அளிக்க முடியாது எனவும் கூறி, சீமானின் மனுவுக்கு பதிலளிக்கும்படி காவல் துறைக்கு உத்தரவிட்டு, விசாரணையை பிப்ரவரி 6ந்தேதிக்கு தள்ளி வைத்தார்.

# மதுபாட்டிலை விழுங்க முயன்ற குட்டி யானை சமூக வலைத்தளங்களில் வீடியோ வைரல்

ஊட்டி, ஜன.24

சுற்றுலா தலமான நீலகிரிக்கு தினந்தோறும் வெளி மாவட்டங்கள், வெளிமாநிலங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

இயற்கை சூழலை பாதுகாக்கும் விதமாக நீலகிரி மாவட்டத்தில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நீலகிரிக்கு சுற்றுலா வரும் சுற்றுலாப் பயணிகள் தாங்கள் கொண்டு வரும் பிளாஸ்டிக் பொருட்களை சாலையோரம் வீசி செல்கின்றனர். இன்னும் சில சுற்றுலாப் பயணிகள் தாங்கள் வாங்கி வந்த மதுவை குடித்து விட்டு, காலிபாட்டிலை சாலையோரம் வீசி செல்கிறார்கள்.

முதுமலை, மசினகுடி, மாவநல்லா, குன்னூர், மேட்டுப்பாளையம், கோத்தகிரி பகுதிகளில் உள்ள சாலையோரங்களில் அதிகளவில் கிடக்கிறது.

இதனால் வனவிலங்குகளின் கால்களில் காயங்கள் ஏற்பட்டு, உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக வன ஆர்வலர்கள் கவலை தெரிவித்து உள்ளனர்.

இந்த நிலையில் முதுமலை வனப்பகுதியில் வனத்தைவிட்டுவெளியே தாயுடன் வந்த குட்டி



யானை சாலையோரத்தில் சுற்றி திரிந்தது.

அப்போதுகுட்டியானை சாலையோரம் கிடந்த மது பாட்டிலை தனது துதிக்கையால் எடுத்து வாயிலுக்குள் திணிக்க முயற்சிக்கிறது. இதனை அவ்வழியாக சென்றவர் வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டார்.

இந்த காட்சிகள் தற்போது வைரலாகி வருகிறது. இதனை பார்த்த வன ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர். வனத்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு சாலையோரம் மதுபாட்டில்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் வீசுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் நியமனம்

சென்னை, ஜன.24

தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்துக்கு ஒன்றிய, நகரம், பகுதி, பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை நியமித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய அமைப்பாளர்கார்த்திகேயன், தெற்கு ஒன்றியம் இளமதுவாலாஜா பாத் வடக்கு ஒன்றியம்லோகுதாஸ்தெற்கு ஒன்றியம்குமரன், சித்தாமூர்கிழக்கு ஒன்றியம்கண்ணன், மேற்கு ஒன்றியம் லோகநாதன், லத்தூர் வடக்கு ஒன்றியம் கார்த்திகேயன், தெற்கு ஒன்றியம்தமிழ் மாறன்.

திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியம்தாமரைக்கண்ணன், மதுராந்தகம் தெற்கு ஒன்றியம்தினேஷ், வடக்கு ஒன்றியம் லோகேஷ்குமார், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம்சரத்குமார், தெற்கு ஒன்றியம்பிரகாஷ்.

உத்தரமேரூர் ஒன்றியம் யுவராஜ், காலவாக்கம் ஒன்றியம் வெங்கட்ராமன், மதுராந்தகம் நகரம் டாக்டர் முத்து முகமது புகாரி, காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 1சந்தீப்குமார், பகுதி 2பார்த்திபன், பகுதி 3அருள்பெருமாள் பகுதி 4வேல்முருகன், வாலாஜா பாத் பேரூர்சுகுமாரன், உத்தரமேரூர் பேரூர்அன்பு ராஜா, கருங்குழி பேரூர்கார்த்திகேயன், அச்சிறுப்பாக்கம் பேரூர்சிவசங்கரன், இடைக்கழிநாடு பேரூர் முகமது ரிப்பாய்.

# பட்டாசு விபத்தில் உயிரிழந்த 27 பேரின் குடும்பங்களுக்கு பசுமைத் தீர்ப்பாய ஆணைப்படி தலா ரூ.20 லட்சம் வழங்க ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜன.24

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

விருதுநகர் மாவட்டம் சாத்துரரை அடுத்த அச்சங்குளம் கிராமத்தில் உள்ள ஸ்ரீமாரியம்மாள் பட்டாசு ஆலையில் கடந்த 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் தேதி நடந்த பயங்கர வெடி விபத்தில் 27 பேர் உயிரிழந்து நான்கு ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், அவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.20 லட்சம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சென்னையில் உள்ள தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வால் பிறப்பிக்கப்பட்டு, உச்சநீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டத் தீர்ப்பு இன்னும் செயல்படுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் விவகாரத்தில் தமிழக அரசு இந்த அளவுக்கு அலட்சியம் காட்டுவது கண்டிக்கத்தக்கது.

ஸ்ரீமாரியம்மாள் பட்டாசு ஆலையில் நடந்த விபத்தில் 27 பேர் உயிரிழந்த நிலையில், 15க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். உயிரிழந்தவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் ரூ.3 லட்சமும், மத்திய அரசின் சார்பில் ரூ.2 லட்சமும் மட்டுமே இழப்பீடாக வழங்கப்பட்ட நிலையில், இந்த விபத்து குறித்த வழக்கை தாமாக முன்வந்து விசாரித்த பசுமைத் தீர்ப்பாயம் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.20 லட்சமும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ரூ.15 லட்சமும் இழப்பீடாக வழங்க வேண்டும் என்று அதே ஆண்டு ஜூன் மாதத்தில் தீர்ப்பளித்தது. ஆனால், அதை ஏற்க மறுத்த திமுக அரசு, அத்தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அதை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டவாறு இழப்பீட்டை வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது.



ஆனால், ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறி பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்குவதை தாமதப்படுத்தி வருகிறது தமிழக அரசு. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் வாழ்வாதாரம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், தமிழக அரசு மனிதநேயமின்றி செயல்படக்கூடாது. அந்த விபத்தில் தாய், தந்தை ஆகிய இருவரையும் இழந்த நந்தினி என்ற 15 வயது சிறுமி எதிர்காலத்தை எப்படி எதிர்கொள்வது என்பது தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார். குடும்பத்தின் ஒற்றை வாழ்வாதாரமாக விளங்கிய தந்தையை இழந்து பல குழந்தைகள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் நலனில் சிறிதும் அக்கறையில்லாமல் தமிழக அரசு செயல்படக்கூடாது.

தேவையற்ற திட்டங்களுக்காக கோடிக்கணக்கில் செலவழிக்கும் தமிழக அரசு, 27 குடும்பங்களில் வாழ்வாதாரத்தை கணக்கில் கொண்டு பட்டாசு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் பசுமைத் தீர்ப்பாயம் ஆணையிட்டவாறுஇழப்பீட்டை, கடந்த நான்கு ஆண்டுகளுக்கான வட்டியுடன் சேர்த்து வழங்க வேண்டும். விருதுநகர் மாவட்டத்தில் அடிக்கடி பட்டாசு விபத்துகள் ஏற்படும் சூழலில், அங்கு தீக்காயங்கள் மற்றும் வெடிமருந்து விபத்து காயங்களுக்கு மருத்துவம் அளிப்பதற்கான சிறப்பு மருத்துவமனை ஒன்றை உடனடியாக அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

# சீமானுக்கு எதிராக போராட்டம் 878 பேர் மீது வழக்கு

சென்னை, ஜன.24

தந்தை பெரியார் குறித்த அநாகரிக பேச்சிற்கு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான்

இதுவரை ஆதாரம் அளிக்காததால் அவரது வீடு முற்றுகையிடப்படும் என்று தந்தை பெரியார் திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தெரிவித்து இருந்தார்.

இதையடுத்து சென்னை நீலாங்கரையில் உள்ள சீமான் வீட்டிற்கு அருகே



போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே அறிவித்தப்படி சீமான் வீட்டை பெரியாரிய உணர்வாளர்கள் முற்றுகையிட முயன்றனர். காவல் துறையினர் அமைத்த தடுப்புகளைமீறிஅவர்கள்செல்ல முயன்றனர். மேலும், சீமான் உருவப்படத்தை செருப்பால் அடித்தும், உருவபொம்மையை எரித்தும் பெரியாரிய உணர்வாளர்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்தினர்.

இதையடுத்து தடுப்புகளை மீறி செல்ல முயன்ற பெரியாரிய உணர்வாளர்களை போலீசார் கைது செய்தனர். சீமானுக்கு எதிராக போராடிய 878 பேர் மீது நீலாங்கரை போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# திருச்செந்தூர் கோவிலில் நடைபயிற்சியின் போது பக்தர்களுக்கு ஆசி வழங்கிய தெய்வானை யானை

திருச்செந்தூர், ஜன.24

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாக விளங்கி வரும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தெய்வானை என்ற யானை பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்த யானைதங்குவதற்காக கோவிலின் பின்புறம் குடில் அமைக்கப்பட்டுள்ளது. யானையை குளிப்பாட்டுவதற்காக கடந்த சில வருடங்களுக்கு முன்பு ரூ.30 லட்சம் மதிப்பில் குளியல் தொட்டியும் கட்டப்பட்டுள்ளது. இந்த குளியல் தொட்டியில் தினமும் இந்த தெய்வானை யானை குளித்து மகிழும்.

இந்த நிலையில் கடந்த



நவம்பர் மாதம் 18ந்தேதி தெய்வானை யானை தாக்கியதில் பாகன் உதயகுமார், அவரது உறவினர் சிசுபாலன் ஆகிய இருவரும் உயிரிழந்தனர். இந்த சம்பவத்திற்கு பிறகு தெய்வானை யானை கோவில் நிர்வாகத்தினர், வனத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

தொடர்ந்து பல நாட்களுக்கு பிறகு யானை வெளியே அழைத்து வரப்பட்டது. மேலும் காலை நடைபயிற்சி அழைத்து வரப்பட்டது. ஆனால் பக்தர்களுக்கு ஆசி வழங்க அனுமதிக்கப்படாமல் இருந்து வந்தது.

இந்த நிலையில் நேற்று தெய்வானை யானை கோவிலை சுற்றி நடைபயிற்சி மேற்கொண்டது. அப்போது அங்கு நின்ற பக்தர்கள் தெய்வானையை கண்டு அருகே சென்று பார்த்தனர்.

அந்த சமயத்தில் 2 மாத காலத்திற்கு பிறகு பக்தர்களுக்கு தெய்வானை யானை ஆசி வழங்கியது. இதை அங்கிருந்த பக்தர்கள் கண்டு ரசித்ததுடன் தங்களுடன் வந்தவர்களையும், உடன்வந்த குழந்தைகளையும் அழைத்து தெய்வானை யானையிடம் ஆசி பெற்றனர்.

# தேசிய அளவில் பாதுகாப்பில் முன்னணி சென்னை மெட்ரோவுக்கு சுரக்ஷா புரஸ்கார் வெண்கல விருது

சென்னை, ஜன.24

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், இந்திய தேசிய பாதுகாப்பு கவுன்சில் (NSCI), 2024 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு விருதுகளில் மதிப்புமிக்க 'சுரக்ஷா புரஸ்கார்' வெண்கலம் விருது பெற்றுள்ளது. இந்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத்தின், தேசிய பாதுகாப்பு கவுன்சில் இந்தியா (NSCI) வழங்கிய இந்த மதிப்புமிக்க அங்கீகாரம், 2வது கட்ட பணிகள் நடைபெறும் கட்டுமான தளங்களில் காட்சிப்படுத்தப்பட்ட சிறந்த பாதுகாப்பு செயல்திறனுக்காகவழங்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம் 2ன் கட்டுமான பணிகள் 118.9 கி.மீ. நீளத்தில் 128 மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்த விருது குறிப்பாக, கலங்கரை விளக்கம்



மெட்ரோ நிலையத்திலிருந்து பாரதிதாசன் சாலை மெட்ரோ நிலையம் வரையிலான UG 01 தொகுப்பிற்கு வழங்கப்பட்டது, இது ITD Cementation India நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்டு வருகிறது. சென்னைமெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரரான ITD Cementation India Ltd ஆகிய இரு நிறுவனங்களும், கட்டுமான பாதுகாப்பிற்கான Suraksha Puraskar விருது மூலம் கௌரவிக்கப்பட்டனர். குறிப்பாக, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் விருது மதிப்பீட்டின் போது முதல் 3 இடங்களில் ஒன்றாக இருந்தது மற்றும் இந்தியா முழுவதும் மெட்ரோ ரெயில் திட்ட பிரிவில் இந்த மதிப்புமிக்க அங்கீகாரத்தைப் பெற்ற ஒரே நிறுவனமாகவும் உள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம் 2ன் கட்டுமானம் மற்றும் செயல்பாடு முழுவதும் உயரிய பாதுகாப்புத் தரநிலைகளை பின்பற்றி, அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பான பயண அனுபவத்தை வழங்க உள்ளதை உறுதி செய்கிறது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மெட்ரோ ஸில் (21.01.2025), சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் இணை பொது மேலாளர் (தர உறுதி/தரக் கட்டுப்பாடு) பி. கவுந்தின்ய போஸ், இந்த விருதினைசென்னைமெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

இந்நிகழ்வில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் ITD Cementation India நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# பெருங்களத்தூரில் 29ந்தேதி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஜன.24

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:

நிறைவேற்ற முடியாத பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்து, ஆட்சியில் அமர்ந்த தி.மு.க.வின் ஸ்டாலின் அரசு, கடந்த 44 மாத காலமாக மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்றித் தராமல், தனது குடும்ப நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருவதால், மக்கள் பல்வேறு வகைகளில் இன்னல்களைச் சந்தித்து, மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருவது வேதனைக்குரிய விஷயமாகும்.

அந்த வகையில், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்5, பெருங்களத்தூர் பகுதிக்கு உட்பட்ட இடங்களில் அத்தியாவசியத் தேவைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால், அப்பகுதி வாழ் மக்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருவதாக, தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அதன் விபரம் வருமாறு:

2021, சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது தி.மு.க. அறிவித்த தேர்தல் வாக்குறுதிப்படி, பெருங்களத்தூர் மற்றும் பீர்க்கன்கரணை பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத காரணத்தால் மக்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

அம்மாவின் ஆட்சியில் பீர்க்கன்கரணை ஏரி 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு கரைகள் வலுப்படுத்தப்பட்டன. ஆனால், தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்த ஏரி முழுவதும் ஆகாயத் தாமரை செடிகளால் மூடப்பட்டு கழிவு நீர் குட்டையாக மாறி உள்ளது.

பெருங்களத்தூர் பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட சமுதாய நலக் கூடம், வணிக வளாகம், அங்கன்வாடி மையம் மற்றும் நாய்கள் கருத்தடை மையம் முதலானவை நீண்ட காலமாகியும் திறக்கப்படாமல் உள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியின் போது பெருங்களத்தூர் பகுதியில் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்த 15 பூங்காக்கள், தி.மு.க. அரசின் அலட்சியம் காரணமாக எவ்வித பராமரிப்புமின்றி மிகவும் பாழ்பட்டுள்ளதோடு, மின் விளக்குகள் எரியாத காரணத்தால் இரவு நேரத்தில் சமூக விரோதிகளின் மதுக்கூடங்களாக மாறி உள்ளது. இதனால், மக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர்.



பெருங்களத்தூர் பகுதியில் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் பல இடங்களில் சின்டெக்ஸ் டேங்க்குகள் அமைக்கப்பட்டு குடிநீர் தடையின்றி வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது இவை பராமரிப்பின்றி பாழ்பட்டு வருவதோடு, ஒவ்வொன்றாக அப்புறப்படுத்தப்பட்டு வருவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

பெருங்களத்தூர் முழுவதும் உள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால், அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாக மக்கள் ஆதங்கத்தோடு தெரிவிக்கின்றனர்.

பெருங்களத்தூர் முழுவதும் உள்ள கழிவுநீர் கால்வாய்கள் முறையாக பராமரிக்காத காரணத்தால், சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதோடு, டெங்கு உள்ளிட்ட காய்ச்சல்களால் மக்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

மக்கள் நலனில் சிறிதும் அக்கறை இல்லாமல் இருந்து வரும், தி.மு.க.வின் ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும், மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அ.தி.மு.க. செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தின் சார்பில் வருகிற 29ந்தேதி (புதன் கிழமை) மாலை 4 மணியளவில், பெருங்களத்தூர், காமராஜர் நெடுஞ்சாலை, பெருமாள்கோவில் ரவுண்டானா அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ராசேந்திரன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# சமூக ஆர்வலர் கொலை எதிரொலி: திருமயம் கல் குவாரிகளில் 2வது நாளாக அதிரடி சோதனை

புதுக்கோட்டை, ஜன.24

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே வெங்களூரைச் சேர்ந்தவர் ஜகபர் அலி (வயது 58) அதிமுக பிரமுகரும், சமூக ஆர்வலருமான இவர் திருமயம் அருகே துளையானூரில் இயங்கி வரும் கல்குவாரிகளில் அனுமதிக்கப்பட்ட அளவை விட சட்டவிரோதமாக கனிமங்கள் தோண்டி எடுக்கப்படுவதாக புகார் தெரிவித்து போராட்டம் நடத்தி வந்தார்.



மேலும் மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். மாவட்ட நிர்வாகத்திடமும் அவ்வப்போது புகார் அளித்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த 17ந் தேதி ஜகபர் அலியை லாரி ஏற்றி திட்டமிட்டு கொலை செய்தனர். இது தொடர்பாக லாரி ஏற்றி கொலை செய்த திருமயம் பகுதியை சேர்ந்த மினி லாரி உரிமையாளர் முருகானந்தம்(56),

அதற்கு உறுதுணையாக பின் தொடர்ந்து வழிகாட்டிய ராமநாதபுரத்தைச் சேர்ந்த அவரது லாரி டிரைவர் காசிநாதன், கொலைக்கு மூளையாக இருந்து செயல்பட்டதாக கூறப்படும் திருமயம் அருகே பாப்பாத்தி ஊரணியைச் சேர்ந்த கல்குவாரி அதிபர் ராசு(54) அவரது மகன் தினேஷ் (28) ஆகிய 4 பேரை திருமயம் போலீசார் கைது செய்தனர்.

மேலும் இந்த கொலையில் தலைமறைவாக இருக்கும் மற்றொரு கல் குவாரி உரிமையாளர் ராமையாவை வலைவீசி தேடி வருகின்றனர்

கல்குவாரி முறைகேடு தொடர்பாக ஜகபர் அலி தான்கொல்லப்படுவதற்கு முன்பு பேசிய வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் தற்போது வைரலாகி வருகிறது.

இதற்கிடையே ஜகபர் அலியால் குற்றம் சாட்டப்பட்ட ராசு மற்றும் ராமையா ஆகியோரின் கல்குவாரிகளில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை அதிகாரிகள் நேற்று அதிரடி ஆய்வு மேற்கொண்டனர்

இந்த ஆய்வில் திருச்சி புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநா் ஜெயஷீலா, புதுக்கோட்டை உதவி இயக்குநா் லலிதா, நாகை உதவி இயக்குநா் சுரதா உள்ளிட்ட கரூா், பெரம்பலூா், அரியலூா் மாவட்டங்களைச் சோ்ந்த புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநா்கள், புவியியலாளா்கள் 12 பேர் கொண்ட குழுவினா் ஈடுபட்டனா்.

இதில் எந்த அளவுக்கு கற்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன என்பது குறித்து கரூரிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள டிரோன் கேமரா மூலம் அளவீடும், வீடியோ பதிவும் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பணிகள் இன்று 2வது நாளாக காலையில் இருந்து தொடங்கி நடைபெற்று வருகிறது.

இது குறித்து அதிகாரிகள் கூறும்போது,

புகாருக்கு ஆளாகியுள்ள ராசு, ராமையா ஆகியோர் நடத்தும் கல்குவாரி மற்றும் கிரஷர்களின் அனுமதி ஒப்பந்த காலம் 2023ம் ஆண்டிலேயே முடிந்து விட்டது.

இருப்பினும் சட்ட விரோதமாக கற்களை வெட்டி எடுத்துள்ளதாக ஏற்கனவே ராமையாவுக்கு கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ரூ.6.70 கோடி அபராதமும், ராசுவுக்கு ரூ.12 கோடி வரை அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆய்வு செய்யப்பட்டதில் அளவுக்கு அதிகமான கனிம வளங்கள் வெட்டி எடுக்கப்பட்டதும் முதல் கட்டமாக தெரிய வந்துள்ளது.

அளவீடும் பணிகள் மேலும் 3 நாட்கள் நடைபெற உள்ளது. அளவிடும் பணி முடிந்ததும் அதற்கான அறிக்கை தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்றனர்.

இதற்கிடையே குற்றம் சாட்டப்பட்ட கடந்த சில ஆண்டுகளில் மட்டும் கல்குவாரி மற்றும் கிரசர்களில் பல கோடி கனிம வளம் முறைகேடு நடந்துள்ளது திட்டவட்டமாக தெரிய வந்துள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுபோன்று உரிமங்களை புதுப்பிக்காமல் இயங்குவதாக புகார் எழுந்துள்ளது.

இதற்கிடையே சமூக ஆர்வலர் ஜகபர் அலி கொலை செய்யப்பட்டதை கண்டித்து எதிர்க்கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் போராட்டம் நடத்தி வருகின்றன புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகம் முன்பு இன்று தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு ஒருங்கிணைப்பு குழு பொறுப்பாளர் உதயகுமார் கலந்துகொண்டு கண்டனஉரை ஆற்றினார். இதே போன்று தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த போலீஸ்காரர் மீது போக்சோ வழக்கு

புளியங்குடி, ஜன.24

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பகுதியை சேர்ந்தவர் சைலேஷ் (வயது 42). இவர் கடந்த 2003ம் ஆண்டு தமிழக காவல்துறையில் பணியில் சேர்ந்தார்.

இவர் சில மாதங்களுக்கு முன்பாக தென்காசி மாவட்டம் சிவகிரி போலீஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தபோது, அந்த பகுதியை சேர்ந்த ஒரு இளம் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

அவருடன் சேர்ந்து அதே போலீஸ் நிலையத்தில் பணியாற்றும் சிவகிரி அருகே உள்ள ஆத்துவழி கிராமத்தை சேர்ந்த செந்தில் (44) என்ற போலீஸ்காரரும் சைலேசுடன் சேர்ந்து அந்த இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்து உள்ளார்.

இதுதொடர்பாக இளம் பெண், சிவகிரி போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். தொடர்ந்து அந்த பெண்ணின் குற்றச்சாட்டில் முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால் இது தொடர்பாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அரவிந்த் உத்தரவின்பேரில் புளியங்குடி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு இன்ஸ்பெக்டர் சாந்தி வழக்குப்பதிவு செய்தார்.

அதன்படி 2 போலீஸ்காரர்கள் மீதும் போக்சோ வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

வன்கொடுமை தடுப்பு சட்டம் பாய்ந்ததால் புளியங்குடி துணை போலீஸ் சூப்பிரண்டு வெங்கடேசன் இது தொடர்பாக விசாரணை நடத்தி வந்தார். தொடர்ந்து புகாருக்கு உள்ளான 2 பேரையும் கைது செய்ய அவர் உத்தரவிட்டார்.



இதனிடையே தற்போது ஆலங்குளம் உட்கோட்டத்துக்கு உட்பட்ட ஊத்துமலை போலீஸ் நிலையத்தில் பணியாற்றி வந்த சைலேசுக்கும், சிவகிரியில் பணியாற்றி வரும் செந்திலுக்கும் இந்த தகவல் தெரியவந்தது. இதை யடுத்து அவர்கள் 2 பேரும் கடந்த 2 நாட்களுக்கு முன்பு தலைமறைவாகி விட்டனர்.

அவர்களைகைது செய்ய இன்ஸ்பெக்டர் ஆடிவேல் தலைமையிலான தனிப்படை போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வந்த நிலையில், நேற்று நாகர்கோவிலில் பதுங்கியிருந்த சைலேசை கைது செய்தனர்.

கைதான சைலேசை தென்காசி கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும் தலை மறைவாக உள்ள செந்திலை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். தொடர்ந்து அவர்கள் 2 பேரையும் 'சஸ்பெண்டு' செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இதனிடையே தன் மீது பொய் வழக்கு போட்டு உயர் அதிகாரிகள் தன்னை சிறையில் அடைக்க முயற்சி செய்வதாக சைலேஷ் பேசி வெளியிட்ட வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# திமிங்கல உமிழ்நீர் பதுக்கி விற்பனை: 5 பேர் கைது

நாகப்பட்டினம், ஜன.24

நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணியில் இந்திய அரசால் தடை செய்யப்பட்ட திமிங்கல உமிழ்நீரை (ஆம்பர்கிரீஸ்) பதுக்கி வைத்து, விற்பனை செய்யப்படுவதாக வனத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.




அதன் அடிப்படையில், அந்த பகுதியில் வனத்துறையினர் அதிரடி சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கு திமிங்கல உமிழ்நீர் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

பின்னர், தடை செய்யப்பட்ட திமிங்கல உமிழ்நீரை பதுக்கி விற்பனை செய்ய முயன்ற நாகை நம்பியார் நகரை சேர்ந்த வீரமணி, கார்த்திகேயன் மற்றும் பாண்டிச்சேரியை சேர்ந்த பெலிக்ஸ் பவுல் ராஜ், தஞ்சையை சேர்ந்த தமிழரசன், திருவாரூர் மாவட்டம், முத்துப் பேட்டையை சேர்ந்த கண்ணன் ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

தொடர்ந்து, அவர்களிடம் இருந்து 9 கிலோ திமிங்கல உமிழ்நீர் பறிமுதல் செய்யப்பட்டு, ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்சம்பவம் வேளாங்கண்ணியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வங்கதேசத்தினர் ஊடுருவல்: கோவை, திருப்பூரில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை



கோவை,, ஜன.24

அண்டை நாடான வங்காளதேசத்தில், இந்தியாவுக்கு அடுத்தபடியாக அதிகளவு பனியன் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அங்கு ஏற்பட்ட சூழ்நிலை மாற்றம், அரசியல் மாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பனியன்தொழில் முடங்கியது. இதனால் தொழிலாளர்கள் பலர் வேலையிழந்தனர்.

இதன் காரணமாக வங்காளதேசத்தினர், மேற்கு வங்கம் வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவி, போலி ஆதார் அட்டைகளை தயாரித்து தமிழகத்திற்குள் வடமாநில தொழிலாளர்கள் போர்வையில் நுழைந்துள்ளதாக மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்தது.

உளவுத்துறை எச்சரிக்கையை தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் மாநகர மற்றும் மாவட்ட போலீசார், கோவை மாவட்ட பயங்கரவாத தடுப்பு பிரிவு போலீசார் கடந்த சில நாட்களாகவே சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கோவை மாவட்ட பயங்கரவாத தடுப்பு பிரிவு போலீஸ் சூப்பிரண்டு பத்ரி நாராயணன் உத்தரவின் பேரில் பயங்கரவாத தடுப்பு பிரிவு போலீசார் திருப்பூர் மாவட்டம் பல்லடம் போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பனியன் நிறுவனங்கள் மற்றும் வடமாநில தொழிலாளர்கள் தங்கியுள்ள பகுதிகளில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு வடமாநில வாலிபர்கள் போர்வையில் தங்கி வேலை பார்த்து வந்த வங்க தேசத்தினர் 31 பேரை போலீசார் கைது செய்தனர்.

இதேபோல் திருப்பூர் வடக்கு போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடந்த சோதனையில் 8 வங்கதேசத்தினர் பிடிபட்டனர்.

கடந்த வாரத்தில் மட்டும் 39 வங்கதேசத்தினர் கைது செய்யப்பட்டு, சென்னை புழல் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் இன்னும் பலர் போலி ஆதார் அட்டைகள் தயாரித்து வடமாநில தொழிலாளர்கள் போர்வையில் திருப்பூர் மற்றும் கோவையில் தங்கியிருப்பதாக கூறியுள்ளனர்.

இதையடுத்து கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட போலீசார்கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர். பனியன் நிறுவனங்கள், வடமாநில தொழிலாளர்கள் அதிகம் உள்ள பகுதிகளில் போலீசார் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளனர்.

வடமாநில தொழிலாளர்களின் நடவடிக்கைகளையும் கண்காணிக்கின்றனர். சந்தேகத்திற்கிடமாக யாராவது தெரிந்தால் அவர்களையும் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். பனியன் நிறுவனங்களில் பணியாற்றி வரும் வெளிமாநில தொழிலாளர்களின் ஆவணங்களை வாங்கி சரி பார்க்கும் பணியிலும் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

திருப்பூர் மாநகர போலீஸ்கமிஷனர்ராஜேந்திரன் உத்தரவின் பேரில் மாநகரில் 24 இடங்களில் சோதனை சாவடி அமைக்கப்பட்டுவாகனசோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வழியாக வரும் அனைத்து வாகனங்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. வாகனங்களில் வருபவர்களிடம் முறையான ஆவணங்கள் உள்ளதா? எதற்காக திருப்பூர் வருகின்றனர்? உள்பட பல்வேறு கேள்விகளை கேட்டு விசாரணை நடத்துகின்றனர். முறையான ஆவணங்கள் வைத்துள்ளவர்களை தீவிர சோதனைக்கு பின்னர் அனுமதிக்கின்றனர்.

இதேபோல் மாவட்ட முழுவதும் உள்ள சோதனை சாவடிகளிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு, அந்த வழியாக வரும் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில், வங்கதேசத்தின் ஊடுருவல் குறித்து என்.ஐ.ஏ. அதிகாரிகளும் விசாரிக்கின்றனர். அவர்கள் கோவை மற்றும் திருப்பூரில் முகாமிட்டு, பனியன்நிறுவனங்கள் மற்றும் வடமாநில தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிக்கு சென்று வங்கதேசத்தினர் தங்கியுள்ளனரா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை மாவட்டத்திலும் ஏராளமான தொழில் நிறுவனங்கள் உள்ளதால், இங்கும் வங்கதேசத்தினர் வந்து இருக்கலாம் என்பதால் தொழில் நிறுவனங்களில்சோதனை செய்ய போலீசாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள சோதனை சாவடிகளிலும் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து கோவை கமிஷனர் சரவண சுந்தர் கூறியதாவது:

கோவை மாநகரை பொறுத்தவரை சட்டவிரோதமாக யாராவது தங்கியுள்ளார்களா என்பது குறித்து தொடர் சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

ஏற்கனவே தொழிலாளர்களின் ஆவணங்கள் சரி பார்க்கப்பட்டு, அதில் உள்ள முகவரிகளிலும் விசாரிக்கப்பட்டது. அதில் உண்மையான விவரங்களே இருந்தன.

இருப்பினும் தொடர் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் முழு விவரங்களை சேகரித்து அதன் உண்மை தன்மையை ஆராய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# 100 ஆண்டுகளை கடந்து நிற்கும் 2,238 அரசு பள்ளிகள்: திருவிழாவாக கொண்டாடும் கல்வித்துறை

சென்னை, ஜன.24

100 ஆண்டுகள் கடந்து இருக்கும் அரசு பள்ளிகளின்விவரங்களைஎடுத்து, அந்த பள்ளிகளில் நூற்றாண்டு திருவிழாவாக அதை கொண்டாட கல்வித்துறை திட்டமிட்டு இருக்கிறது.

அதன்படி, தமிழ்நாட்டில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி படித்த திருக்குவளை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உள்பட 2,238 அரசு பள்ளிகள் 100 ஆண்டுகளை கடந்து இருக்கின்றன.

இந்த பள்ளிகளில் முன்னாள் மாணவர்கள், பெற்றோர் வாயிலாக நூற்றாண்டு திருவிழா கொண்டாடப்பட உள்ளது. அந்த வகையில் திருக்குவளை (தஞ்சாவூர் மாவட்டம்) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இன்று (புதன்கிழமை) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நூற்றாண்டு சுடர் ஏற்றி தொடங்கி வைக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்டத்துக்கு ஒரு பள்ளி வீதம் 37 அரசு பள்ளிகளிலும் நூற்றாண்டு சுடர் ஏற்றப்பட்டு, நூற்றாண்டு திருவிழா நாளை (வியாழக்கிழமை) முதல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 2ந் தேதி வரை கொண்டாடப்பட உள்ளது.

இது மாவட்ட அளவிலான தொடக்க விழா கொண்டாட்டம் ஆகும். அதன் பின்னர் 100 ஆண்டுகளை கடந்த பள்ளிகள் பள்ளி அளவில் நூற்றாண்டு திருவிழாவை பள்ளியின் ஆண்டுவிழாவோடு முன்னாள் மாணவர்கள், பெற்றோரை இணைத்து கொண்டாடவும் கல்வித்துறை பரிந்துரைத்து இருக்கிறது.




இதற்காக சில வழிகாட்டு நெறிமுறைகளை தலைமை ஆசிரியர்களுக்கு கல்வித்துறை வகுத்துள்ளது. அதன்படி, விழாக்குழு வாயிலாக பள்ளி ஆசிரியர்கள், முன்னாள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், உள்ளாட்சி உறுப்பினர்கள், கல்வி அலுவலர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பள்ளியை சார்ந்த அனைவருக்கும் நூற்றாண்டு விழா குறித்து தெரியப்படுத்த வேண்டும்.

விழாவில் தற்போது பணிபுரியும் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், முன்னாள் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களை கவுரவிக்க வேண்டும். மாணவர்கள் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த திட்டமிட வேண்டும்.

விழாவை புகைப்படம் மற்றும் வீடியோ வாயிலாக பதிவு செய்து ஆவணப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு உள்ளன.

இதனை தவறாது பின்பற்றி, பள்ளி நூற்றாண்டு திருவிழாவை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கு, கல்வித்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

சென்னை மாவட்டத்தில் திருவல்லிக்கேணியில் உள்ள லேடி விலிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி 100 ஆண்டுகளை கடந்துள்ளது. இந்த பள்ளியில் நூற்றாண்டு திருவிழா அடுத்த மாதம் 3ந் தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்பட இருக்கிறது.

இதற்காக முன்னாள் மாணவர்கள் பலர் அழைக்கப்பட்டு உள்ளனர். பிரபல பட்டிமன்ற பேச்சாளர்களான பர்வீன் சுல்தானா, பாரதி பாஸ்கர் ஆகியோர் இந்த பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் ஆவார்கள். மேலும் சிலர் வெளிநாடுகளில் பணிபுரிவதாகவும், ஒருவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவர்களை ஒருங்கிணைத்துவிழாவை சிறப்பாக கொண்டாடும் முயற்சியில் கல்வித்துறை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

தினகனி



# கோபி அருகே 4 பேர் விஷம் குடித்து பலியான வழக்கு: தற்கொலைக்கு தூண்டியதாக 4 பேர் கைது



கோபி, ஜன.24

ஈரோடு மாவட்டம், கோபி அருகே மீன்கிணறு பகுதியை சேர்ந்தவர் தனசேகர், 36. இவரதுமனைவி பாலாமணி, 29. இருவரும் கார்மென்ட்ஸ் நிறுவனத்தில் டெய்லராக பணி புரிந்தனர். இவர்களுக்கு வந்தனா (10) என்ற மகள் மோனீஷ் ( 7) என்ற மகன் இருந்தனர். கடந்த, 15ம் தேதி தன் தாய், தந்தை ஆகியோர் விஷம் சாப்பிட்டு விட்டதாகவும், தனக்கும், தம்பிக்கும், கூல்டிரிங்சில் மாத்திரையை அவர்கள் கலந்து கொடுத்து விட்டதாகவும், தன் பாட்டி பெரியகண்ணாள் (60) என்பவருக்கு பேத்தி வந்தனா போனில் தகவல் தெரிவித்தார்.

அதிர்ச்சியடைந்த பெரியகண்ணாள், பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சென்று பார்த்தபோது, மகனும், மருமகளும் இறந்தது தெரியவந்தது. இந்நிலையில், சிகிச்சையில் இருந்த, இரு குழந்தைகளும் மறுநாள் இறந்தனர். இது குறித்து, சிறுவலுார் போலீசார் நடத்திய விசாரணையில், தற்கொலைக்கான காரணம் குறித்த கடிதம் சிக்கியது.

அந்த கடிதத்தில், " பெருந்துறை புதுதொட்டிபாளையத்தைச் சேர்ந்த சேது என்கிற கோபி சங்கர் (25), சிறுவலூர் பதிபாளையத்தைச் சேர்ந்த நாராயணசாமி (52),

அதே பகுதியை சேர்ந்த தனசேகர் என்பவருடைய மனைவி வெண்ணிலா (38), சண்முகம் என்பவருடைய மனைவி சுமதி (40) ஆகியோர் எங்களுக்கு சுய உதவிக்குழுக்கள் மற்றும் மைக்ரோ பைனான்ஸ் மூலம் கடன் பெற்று தந்தனர். இதற்காக அதிக தொகையை கமிஷனாக பெற்றுக்கொண்டு எங்களை ஏமாற்றினர். இதனால் நாங்கள் இதர சுய உதவிக்குழுக்களில் பணம் பெற இயலாதபடி செய்து விட்டனர். எனவே நாங்கள் அதிக வட்டிக்கு தனியார் நிறுவனத்தில் கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டோம். மேலும் நிதி நிறுவனத்தில் வட்டிக்குமேல்வட்டி போட்டு பணம் வசூலித்ததால் நாங்கள் மிகுந்த கடனுக்கு உள்ளானோம். நாங்கள் தற்கொலை செய்து கொள்ள இந்த 4 பேர் தான் காரணம்" என்று அதில் கூறப்பட்டிருந்தது.

அதன்பேரில் நடந்த விசாரணையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேரை தற்கொலைக்கு தூண்டியதாக கோபி சங்கர், நாராயணசாமி, வெண்ணிலா, சுமதி ஆகிய 4 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

# குடியரசு தினவிழா: பாதுகாப்பு, முன்னேற்பாடுகள் குறித்து சென்னை காவல் ஆணையர் ஆலோசனை



சென்னை, ஜன.24

நாடுமுழுவதும் குடியரசு தினவிழாவருகிற 26ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடபப்படுகிறது. சென்னை மெரினா காமராஜர் சாலையில் உழைப்பாளர் சிலை அருகே கலைநிகழ்ச்சிகளுடன் குடியரசு தின விழா கொண்டாடப் பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு செய்து வருகிறது.

இந்த நிலையில், குடியரசு தினவிழா பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடுகள் குறித்து சென்னை காவல் ஆணையர் அருண் ஐ.பி.எஸ். தலைமையில் காவல் அதிகாரிகளுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முக்கிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அதன்படி, விடுதிகளில் தங்குபவர்கள், சந்தேக நபர்கள் தணிக்கை, ரோந்து வாகனங்கள் மூலம் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான வணிக வளாகங்கள், வழிபாட்டு தலங்கள், பேருந்துமுனையங்கள் உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சந்தேக வாகனங்கள், உயர் பாதுகாப்பிற்குரிய இடங்கள், கட்டிடங்கள், தகவல் தொடர்பு நிலையங்கள் மற்றும் கடலோர பகுதிகளில் தொடர்ச்சியான ரோந்து பணி செய்து பாதுகாப்பை பலப்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் சென்னை காவல் பிரிவு போலீசார் மூலம் Anti Sabotage Check வெடிபொருள் கண்டறிதல், வெடிகுண்டு நிபுணர்கள், மோப்ப நாய் மூலம் உரிய கருவிகளுடன் தணிக்கை செய்து உரிய பாதுகாப்பை கண்காணித்திட உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தண்ணீர் வாளியில் தவறி விழுந்த 1 வயது குழந்தை உயிரிழப்பு



செங்கல்பட்டு, ஜன.24

செங்கல்பட்டு மாவட்டம் வில்லியம்பாக்கம் அடுத்த மேலச்சேரி கிராமத்தை சேர்ந்தவர் மணிகண்டன் (28 வயது). இவரது மனைவி ஜாய்ஸ். இவர்களுடைய மகன்கள் ஆல்வின் ஜோ (4 வயது) மற்றும் அகஸ்டின் (1 வயது). நேற்று அகஸ்டினுக்கு தாய் ஜாய்ஸ் வீட்டின் வெளியே அமர்ந்து உணவு ஊட்டினார். பின்னர் குழந்தையை வெளியே விட்டுவிட்டு ஜாய்ஸ் மட்டும் வீட்டின் உள்ளே சென்றார். திரும்பி வந்து பார்த்த போது அகஸ்டினை காணவில்லை.

அப்போது வீட்டின் அருகில் உள்ள தெருக்குழாயில் தண்ணீர் நிரப்பி வைத்திருந்த வாளியில் குழந்தை அகஸ்டின் தலைக்குப்புற கவிழ்ந்துகிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்த ஜாய்ஸ், உடனடியாக அகஸ்டினை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக தூக்கிச் சென்றார். அங்கு சிகிச்சை பலனின்றி குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. இதுகுறித்து பாலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பள்ளி மாணவரை காதலில் வீழ்த்தி கடத்தி சென்ற 2 குழந்தைகளின் தாய்

சென்னை, ஜன.24

காதலுக்கு கண் இல்லை என்பார்கள். பள்ளி மாணவரை காதலில் வீழ்த்தி திருமணமான இளம்பெண் ஒருவர் கடத்தி சென்ற சம்பவம் பெரியபாளையம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பெரியபாளையம் அருகே உள்ள அரும்பாக்கம் கிராமத்தை சேர்ந்த 17 வயது மாணவர் 11ம் வகுப்பு படித்து வருகிறார். இவருக்கும் அதே கிராமத்தை சேர்ந்த திருமணமான 2 குழந்தைகளுக்கும் தாயான வினோதினி (வயது 28) என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. மாணவர் ஆரம்பத்தில் வினோதினியை அக்கா.. அக்கா.. என்று அழைத்து பேசி வந்ததாக கூறப்படுகிறது. நாளடைவில் மாணவர் மீது வினோதினிக்கு விபரீத ஆசை ஏற்பட்டது. தனக்கு திருமணமாகி கணவர் மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர் என்பதையும் மறந்து மாணவரை தனது காதல் ஆசை வார்த்தைகளில் வீழ்த்தினார். இதனால் மாணவருடனான நெருக்கம் அதிகரித்தது. இருவருக்கும் வயது வித்தியாசம் அதிகம் என்பதால் குடும்பத்தினருக்கும் அக்கம் பக்கதினருக்கும் அவர்கள் மீது சந்தேகம் ஏற்படவில்லை. இதனை சாதகமாக பயன்படுத்திய வினோதினியும் மாணவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து உல்லாசம் அனுபவித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு பள்ளிக்கு சென்ற மாணவர் வீட்டுக்கு வரவில்லை. அவரை தேடியும் கண்டுபிடிக்க முடியாததால் மாணவரின் பெற்றோர் பெரியபாளையம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். போலீஸ் இன்ஸ்பெக்டர் பத்மஸ்ரீ சார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர். அப்போதுதான் மாணவருடன் நெருக்கமாக பழகிய வினோதினியும் மாயமாகி போனது தெரிய வந்தது. இதன்பின்னரே வினோதினி மாணவரை தனது காதல் வலையில் வீழ்த்தி கடத்தி சென்று இருப்பது தெரிந்தது. அவர்கள் இருவரும் கல்பட்டு கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் தனியாக தங்கி இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் விரைந்து சென்று மாணவரை மீட்டனர். மேலும் வினோதினியை போக்சோ சட்டத்தை கைது செய்தனர். பின்னர் அவரை திருவள்ளூர் மகிளா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். பள்ளி மாணவரை திருமணமான இளம்பெண் ஒருவர் கடத்தி சென்றது அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் காயம் அடைந்த மேலும் ஒருவர் உயிரிழப்பு



மதுரை, ஜன.24

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் கடந்த 16ந் தேதி ஜல்லிக்கட்டு கோலாகலமாக நடந்தது. இதில் காளைகள் முட்டியதில் மாடுபிடி வீரர்கள், பார்வையாளர்கள் என 76 பேர் காயம் அடைந்தனர். இதில், 17 பேர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தனர்.

அதில், தேனி மாவட்டத்தை சேர்ந்த செல்வமுருகன் (வயது 45) என்பவர், காளை முட்டியதில் பலத்த காயம் ஏற்பட்டு, மதுரை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி செல்வமுருகன் பரிதாபமாக உயிரிழந்தார்.

ஏற்கனவே, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் காளை முட்டியதில் மேட்டுப்பட்டியை சேர்ந்த பெரியசாமி (66) என்பவர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

# 'காதலே காதலே' படத்தின் வீடியோ பாடல் வெளியானது




பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்று பிரபலமானவர் நடிகர் மஹத். இவர் 'மங்காத்தா, ஜில்லா, சென்னை 600028 2, மாநாடு' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். தற்போது 'காதலே காதலே' எனப் பெயரிடப்பட்டுள்ள புதிய படத்தில் நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக மீனாட்சி கோவிந்தராஜன் நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் இயக்குனர் பாரதிராஜா, கே.எஸ்.ரவிக்குமார், விடிவி கணேஷ், ரவீனா ரவி உள்ளிட்டோர் பிரதான வேடங்களில் நடித்துள்ளனர்.

இப்படம் முழுக்க முழுக்க காதல் மற்றும் பொழுது போக்கு அம்சத்துடன் இக்காலத்து இளைஞர்களின் காதலையும் அவர்கள் ஒரு உறவை எப்படி அணுகுகிறார்கள் என்பதை குறித்த படமாக உருவாகியுள்ளது. இப்படத்தை பிரேம் நாத் எழுதி இயக்கியுள்ளார். கீதா கோவிந்தம் படத்துக்கு இசையமைத்த விஷால் சந்திரசேகர் இப்படத்துக்கு இசையமைக்க, ஸ்ரீவாரி பிலிம் தயாரித்துள்ளது. இப்படத்தின் பாடல் உரிமையை சரிகமா நிறுவனம் வாங்கியுள்ளது.

இந்நிலையில் படத்தின் 'அட விளையாட்டா' என்ற வீடியோ பாடல் வெளியாகி உள்ளது. இந்த பாடலை சந்தோஷ் ஹரிஹரன் பாடியுள்ளார், விஜயன் புகழேந்தி பாடல் வரிகளை எழுதியுள்ளார். இதற்கிடையில் திரைப்படம் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வீர தீர சூரன் 2 படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




'சேதுபதி, சித்தா' படங்களை இயக்கிய பிரபல இயக்குனர் அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் தனது 62 வது படமான 'வீர தீர சூரன் 2' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும், சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தை எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியா ஷிபுதயாரித்துள்ளார். இப்படத்திற்குஜி.வி.பிரகாஷ்இசையமைத்துள்ளார்.

இப்படம் இரண்டு பாகங்களாக உருவாக உள்ளதை படக்குழு உறுதி செய்துள்ளது. தற்போதுஇப்படத்தின்இரண்டாவதுபாகத்தின்படப்பிடிப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ளது. முதலில் இப்படத்தின் இரண்டாம் பாகம் வெளியாக உள்ளது. இப்படத்தின் வெளியீட்டிற்குப் பிறகு, முதல் பாகம் உருவாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.

இப்படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படத்தின் டைட்டில் டீசர் மற்றும் போஸ்டர்கள் சில மாதங்களுக்கு முன் வெளியாகி வைரலாகின. படத்தில் எஸ்.ஜே சூர்யா காவல் அதிகாரியாக நடித்துள்ளார். படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு தென்காசி, மதுரை போன்ற பகுதிகள் நடைபெற்றது. தமிழ்நாட்டில் இப்படத்தின் திரையரங்க விநியோக உரிமையை 5 ஸ்டார் நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியது. இந்த நிலையில் தற்போது இப்படத்தின் ரிலீஸ் தேதி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இப்படம் வருகிற மார்ச் மாதம் 27ந் தேதி வெளியாக உள்ளது.

# ரீரிலீஸ் செய்யப்படும் தீபிகா படுகோன் நடித்துள்ள 'பத்மாவத்' படம்




தீபிகா படுகோன் மற்றும் ரன்வீர் சிங் நடிப்பில் கடந்த 2018ம் ஆண்டு வெளியான படம் 'பத்மாவத்'. இந்த படத்தை சஞ்சய் லீலா பன்சாலி இயக்கியுள்ளார். இதிகாசக் கதையை மையமாக வைத்து உருவாகியுள்ள இப்படத்தில் ராஜஸ்தானின் சித்துரை ஆண்ட ராஜபுத்திர வம்ச ராணிபத்மினிவேடத்தில்நடிகைதீபிகாபடுகோன் நடித்துள்ளார். ரன்வீர் அலாவுதீன் கில்ஜி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

ஷாஹித், ஜிம் சர்ப் மற்றும் அதிதி ராவ் ஹைதாரி ஆகியோர் இப்படத்தில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இத்திரைப்படம் விமர்சன ரீதியான பாராட்டையும், பெரும் ரசிகர்களின் ஆதரவையும் பெற்றது. இந்த நிலையில் இப்படம் மீண்டும் திரையரங்குகளில் ரீரிலீஸ் செய்யப்பட உள்ளது.

அதாவதுஇப்படம்வெளியான7ஆண்டுகளுக்கு பிறகு, மீண்டும் வருகிற 24ந் தேதி வெளியாக உள்ளது. இது குறித்த அறிவிப்பை தயாரிப்பாளர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட்: இந்தியா சாம்பியன்



மாற்றுத் திறனாளிகளுக்கான சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்றது. இந்த தொடரில் இந்தியா, இங்கிலாந்து, இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதின. இந்த போட்டியின் லீக் சுற்று முடிவில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள்இறுதிப்போட்டிக்குமுன்னேறின. இந்தியாஇங்கிலாந்து இடையிலான இறுதிப்போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா 20 ஓவர்களில் 4 விக்கெட்டை இழந்து 197 ரன்கள் குவித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக யோகேந்திர படோரியா, 40 பந்துகளில் 73 ரன்கள் எடுத்து அசத்தினார்.

இதையடுத்து 198 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இங்கிலாந்து 19.2 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 118 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் இந்திய அணி 79 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

இந்திய தரப்பில் ராதிகாபிரசாத், 3.2 ஓவர்களில் 19 ரன்கள் மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுகளைகைப்பற்றி இருந்தார். கேப்டன் விக்ராந்த் மற்றும் ரவீந்திரா தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்; இகா ஸ்வியாடெக் அரையிறுதிக்கு முன்னேற்றம்



'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான இகா ஸ்வியாடெக் (போலந்து) அமெரிக்காவின் எம்மா நவரோ உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இகா ஸ்வியாடெக் 61, 62 என்ற நேர் செட் கணக்கில் எம்மா நவரோவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். நாளை நடைபெறும் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இகா ஸ்வியாடெக் அமெரிக்காவின் மேடிசன் கீஸை எதிர் கொள்ள உள்ளார்.

# டி20 போட்டிகளில் ஆடுவது சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கு தயாராவதை பாதிக்காது பட்லர்



பட்லர்தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இதில் முதல் டி20 தொடர் நடைபெறுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டி20 போட்டி கொல்கத்தாவில் இன்று நடக்கிறது.

இதையொட்டி இரு அணி வீரர்களும் சில தினங்களாக தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். இந்நிலையில், இந்தியாவுக்கு எதிரான டி20 போட்டிகளில் ஆடுவது சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கு தயாராவதை பாதிக்காது என பட்லர் கூறியுள்ளார். செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த பட்லர் கூறியதாவது, இந்தியாவுக்கு எதிரான டி20 தொடர் மிகப்பெரிய தொடராக இருக்கப்போகிறது. சொந்த மண்ணில் இந்திய அணி மிகவும் சிறப்பாக செயல்படும். அவர்களுக்கு எதிரான இந்த தொடரை ஆவலாக எதிர்நோக்கி காத்திருக்கிறேன். போட்டி அட்டவணை குறித்து பெரிதாக கவலையில்லை. இந்த டி20 தொடர் மிகவும் சுவாரசியமானதாக இருக்கப்போகிறது என நினைக்கிறேன். இந்திய அணிக்கு எதிராக சில ஒருநாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளோம். அந்த போட்டிகளுக்காகவும் ஆவலுடன் காத்திருக்கிறேன். அதிக அளவிலான டி20 போட்டிகளில் விளையாடுவது, இங்கிலாந்து அணி சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கு தயாராவதை பாதிக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.